பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: கார்த்திகை 15உ (1—12—67) வெள்ளி வெளியூர்: கார்த்திகை 16உ (2—12—67) சனி [இதழ்: 141

போகிறவரின் புத்திமதி --- இருப்பவர்கள் ஏற்பார்களா?

'கவர்னருக்கு முக்கியத்துவம் தருவது சர்வாதிகாரத்துக்குதான் வழிகோலும்!'

'சனநாயகத்தைக் காப்பதுதான் கவர்னர்களின் கடமை -- அமைச்சரவைகளைக் கலைப்பதன்று'--- வெளியேறும் பீகார் கவர்னரின் தெளிவுரை

பாட்னு, நவ. 30—

"அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாப்பதும், சனநாயகம் ஒழுங்காகச் செயல்படுகிறதா என்று பார்த்துக் கொள்வதும்தான் என்னுடைய பணியே தவிர, அமைச்சரவைகளை நீக்குவது அல்ல"

என்று, பீகார் மாநில கவர்னராகப் பதவியிலிருந்து ஓய்வு பெறும் திரு. எம். அனந்தசயனம் ஐயங்கார் கூறினர். தமக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடை வழியனுப்புக் கூட்டத்தில்தான் அவர் இப்படிப் பேசினர்.

அமைச்சர்கள்—அதிகாரிகள்—முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்ட அந்தக் கூட்டத்தில், கவர்னர்களின் உரிமைகள் பற்றி, 'சற்று அதிக'மாகவே மனம் திறந்து பேசியிருக்கும் அவர், உணர்ச்சிவயப்பட்டு ஓர் இடத்தில்,

"என் எண்ணத்தில் பட்டது இது! மற்றவர்கள் அவர்கள் விரும்புவதை செய்துகொள்ளட்டும்; நான் போகிறேன்"

என்று குறிப்பிட்டிருக்கிறர்.

இத்தொடர்பில் அவர் மேலும் பேசியிருப்பதாவது:—

"கவர்னர்களுக்கு, 'ஆதிக்கம்' செய்யும் அளவுக்கு உரிமைகள் — அனுமதிகள் தரக்கூடாது; ஏனெனில் அதன் அடிப்படையில் சர்வாதிகாரப் போக்குதான் விளையும்!

'குடியரசுத் தலைவர் ஆட்சி என்பதும் அதிகாரவர்க்கத்தின் ஆதிக்கப் போக்குக்கு இருக்கும் மற்றெரு பெயரே தவிர வேறன்று! கூடுமானவரையில்—கடைசி வரையில்—குடியரசுத் தலைவர் ஆட்சி தவிர்க்கப்பட வேண்டும்; இல்லையேல், சுற்றிலும் சர்வாதிகார ஆட்சிகள் தோன்றிவரும் இந்த நாளில், இந்தியாவும் அதே பாதைக்குத்தான் செல்லும்."

காமராசர் திட்ட'த்திற்கும், அவர் கண்டனம் தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டிருப்பதாவது:—

"17-க்கு மேற்பட்ட மத்திய—மாநில அமைச்சர்களை, வேலையற்றவர்களாக்கியதுதான் காமராசர் திட்டத்தின் விளைவு; அதனுல் அவர்களது திறமை பாழாயிற்று; அது, நாட்டுக்குத்தான் இழப்பாகும்!

"பீகார் மாநில காங்கிரசு நிர்வாகத்தின் ஒரே 'சாதனை' என்று நான் கருதுவது கடந்த சனவரியில் நடந்த துப்பாக்கிப் பிரயோகமும், அதன் விளைவாகப் பன்னிரண்டுபேர் உயிரிழந்ததும்தான்"

என்று அவர் கூறினர்.

திரு. அனந்தசயனம் அய்யங்கார், மக்களவையின் தலைவராகவும் இருந்திருக்கிருர் என்பது குறிப்பிடத்தக்கது.

காந்தி மைதானத்தில் இந்த மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

திரு. அனந்தசயனம் ஐயங்காருக்கு வெள்ளிப் பேழை ஒன்று பரிசளிக்கப்பட்டது.

பீகார் அமைச்சர்களும் கூட்டத்தில் அமர்ந்திருந்தனர்.

அவர் மேலும் பேசுகையில், பீகார் மாநிலத்தில் இப்போதுள்ள காங்கிரசுத் தலைமையின் போக்கைக் கண்டித்தும் கருத்தறிவித்தார்; ஆனல், முன்னள் காங்கிரசு முதலமைச்சர் ஜாவை மட்டும் தனியாகப் பிரித்துப் பாராட்டினர்.

"மக்களாதரவைப் பெற்ற இரண்டே தலைவர்கள்தான் பீகாரில் உள்ளனர்; அவர்களில் ஒருவர் பி, என் ஜா; மற்றெருவர் இன்றைய முதலமைச்சர் மகாமாய பிரசாத் சின்கா" என்ருர் அவர்.

ராஞ்சியிலும், சுர்சாண்டிலும் நடந்த வகுப்புக் கலவரத்தைக் காரணமாகக் காட்டி, கூட்டணி அமைச்சரவையைப் பதவி விலகுமாறு கோரிய காங்கிரசுத் தலைவர்களின் போக்கை அவர் ஏளனம் செய்தார்.

தற்போதைய முதலமைச்சரும், போலீசு அமைச்சரும் அமைதியைக் காக்க எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைப் புகழ்ந்துபாராட்டினர்.

"1964-ம் ஆண்டல் ஜாம்ஷெட்பூரில் நடந்த கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தொகை இப்போது பாதிக்கப்பட்டவர்களைவிட பலமடங்கு அதிகம்; அப்போது இருந்த முதலமைச்சர் கே. பி. சகாயைப் பதவி விலகுமாறு யாராவது கேட்டார்களா?" என்றும் அவர் விஞவெழுப்பினர்.

சோஷலிஸ்டுத் தளத் தலைவர் திரு. பி. பி. மண்டல் கூட்டணியிலிருந்து விலகி, தம்மோடு விலகியவர்களின் பட்டியலைக் காட்டி முதலமைச்சர் ஆக முனைந்ததை, பெயரைச் சொல்லாமலே கண்டித்தார்.

'அந்தப் பட்டியலை முதலமைச்சரிடம் காட்டவேண்டாம்' என்று தம்மிடம் (கவர்னரிடம்) கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

நிபந்தனையுடன் சம்மதிக்கிருராம் கருநாடக முதல்வர் நிஜலிங்கப்பா!

கண் முன்னுலேயே காமராசர் திட்டம் மீண்டும் ஒரு முறை 'சாகிறது?'

இன்று காலைவரை வெளிவந்துள்ள தகவல்கள்—யூகங்களின்படி, 'காங்கிரசுத் தலைவர் தேர்தலில் போட்டி இருக்குமென்ருலும், மைசூர் முதல்வர் நிஜலிங்கப்பா அதிகாரபூர்வமான காங்கிரசுக் கட்சித் தலைமைக்கான வேட்பாளர்' என்ற ஒரு 'அரைகுறை' அடையாளத்துடன் நிறுத்தப்படுவார் எனத் தெரிகிறது.

"'முதலமைச்சரா—காங்கிரசுத் தலைவரா' என்ற இரண்டில், முன்னதையே விரும்புகிறேன்" என்று—காங்கிரசுத் தலைவர் பதவியில் வெறுப்பைக் காட்டியவர் நிஜலிங்கப்பா என்பது குறிப்பிடத்தக்கது!

வேறு வேறு கோணல்களில் இருந்தாலும், இந்திராவும்—காமராசரும், நிஜலிங்கப்பா பற்றி வெறுப்புகளுக்கிடையே நெருங்கிவருவதாகத் தெரிகிறது!

மூன்று அல்லது நான்கு மாதங்கள் முதலமைச்சர் பதவியுடன் காங்கிரசுத் தலைவராகவும் இருப்பதற்கு நிஜலிங்கப்பா அனுமதிக்கப்படுவார் என்றும், இதற்கு இந்திராவின் ஒப்புதல் இருக்கிறது என்றும் தெரிகிறது.

"இந்த நிபந்தனையுடன் எனக்கு உரிமை அளித்தால்தான், தேர்தலில் நிற்கச் சம்மதிப்பேன்" என, நிஜலிங்கப்பா வலியுறுத்தியிருப்பதாகத் தெரிகிறது!

இது வெற்றிபெற்ருல் 'காமராசர் திட்டம்' என்ற நேரு காலத்திய ஏற்பாடு, மற்றுமொரு தோல்வியைப் பெறும் என்ருகிறது!

எனவே, இதற்குக் காமராசர் ஒப்புதல் அளிக்காமல் இருக்கிருர்! 'முதலமைச்சர் பதவியுடன் காங்கிரசுத் தலைவர் பதவியிலும் இருப்பது, புதிய குறைபாடுகளுக்கு வழிவகுப்பதாகிவிடும்' என்று காமராசர் கருதுவதாகத் தெரிகிறது!

ஏடன் விடுதலை!

ஏடன், நவ. 29—

கடந்த 129 ஆண்டுகளாகப் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் இருந்துவந்த ஏடனும், அதனைச் சுற்றியுள்ள தென் அராபியப் பகுதிகளும் இன்று விடுதலையடைந்தன.

எழுத்தறிவிப்போர் நடத்தும் கிளர்ச்சி

இதுவரை 1,306-பேர் கைது

சண்டிகார், நவ. 30—

பஞ்சாப் மாநிலத்தில் தனியார் துறைப் பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் செய்துவரும் கிளர்ச்சியையொட்டி, இதுவரை 1,306 ஆசிரியர்கள் (ஆசிரியைகள் உட்பட) கைது செய்யப்பட்டுள்ளனர்.

தங்கள் வேலைக்கு உத்தரவாதம் அளிக்கும்வகையில் சட்டமியற்ற வேண்டும் என்று கோரி கடந்த 9 நாட்களாக 9,000-பேர் வேலை நிறுத்தம் செய்துவருகின்றனர்.

மூன்ருண்டுச் சட்டக் கல்வி

பல்கலைக் கழகம் முடிவு

சென்னை, நவ. 30—

இப்போது இரண்டாண்டுக் காலம் படிக்கும் சட்டப் படிப்பை மூன்ருண்டாக உயர்த்துவதற்கு சென்னைப் பல்கலைக் கழகப் பேரவை (செனட்) முடிவு செய்துள்ளது.

அதே நேரத்தில் இரண்டாண்டில் முடிக்கக்கூடிய சட்டப் படிப்பு ஒன்றும் இருக்கும். இதற்கு பி. ஜி. எல். (பேச்சலர் ஆப் ஜெனரல் லா) என்று பெயர்.

இதுவரை 1.92 லட்சம் டன்

தஞ்சையில் கொள்முதல்

தஞ்சை, நவ. 30—

நேற்றுவரை தஞ்சை மாவட்டத்தில் 1,92,000 டன் அரிசிக்குச் சமமான குறுவை நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது.

கேரளத்துக்கு வ. ஆ. அரிசி

வேலூர், நவ. 30—

வடாற்காடு மாவட்டத்திலிருந்து கேரளத்துக்கு 500 டன் அரிசி இவ்வார இறுதிக்குள் அனுப்பப்படும் என்று தெரிகிறது.

மேற்கு வங்க

சட்டமன்றம் கலைப்பு -- ஒரு முக்கிய விளக்கம்

அரசியல் சட்ட வரலாற்றில் ஒரு முக்கிய திருப்பத்தினையும் — குழப்பத்தினையும் தோற்றுவித்திருக்கும் வங்காளத்து சட்டமன்றக் கலைப்புப் பற்றிய நடைமுறை விளக்கம் இங்கு தரப்படுகிறது:—

வங்க சட்டமன்றத் தலைவர், அவையைக் கலைத்ததற்கு ஆங்கிலத்தில் 'சைனி டை' (Sine Die) என்று பெயர்!

அடுத்து கவர்னர் தர்மவிராவும் ஒரு கலைப்புச் செய்திருக்கிருர்; இதற்கு 'புரோராகேஷன்' (Prorogation) என்று பெயர்!

அவைத் தலைவருக்குப் பின் கவர்னர் போட்டிருக்கும் உத்தரவுதான், அதிகார பலம் அதிகம் கொண்டது!

அவைத் தலைவர், சட்டமன்றத்தை, 'சைனி டை' செய்திருக்கிருர் என்ருல், திரும்பவும் ஒரு குறிப்பிட்ட தேதியில் மீண்டும் கூட்டுவதற்கு அவருக்கு அதிகாரம் உண்டு!

ஆனல், அதற்கும் மேற்கொண்டு கவர்னர் சட்டமன்றத்தை 'புரோராக்' செய்கிருர் என்ருல், அதில் சட்டமன்றத் தலைவரின் அதிகாரம் அடிபட்டு விடும்! அரசியல் சட்டத்தின் 174-வது பிரிவின்படி கவர்னரால் சட்டமன்றம் கலைக்கப்படும்போது, அதனை மீண்டும் கூட்டும் உரிமையை—அதிகாரத்தை சட்டமன்றத் தலைவர் இழக்கிருர்!

அதேபோல், அந்தச் சமயம் அவையின் நடவடிக்கைகளில் இருக்கும் விவாதம்—மசோதா ஆகிய எல்லாம் தாளுகவே பயனில்லாதவையாக ஆகிவிடும்! எந்த ஒரு விவாதத்துக்கோ—மசோதாவுக்கோ உயிர் கொடுக்க வேண்டுமென்ருலும், கவர்னரின் 'புரோராகேஷன்' உத்தரவில், அதற்கெனத் தனிக் குறிப்பு இருக்கவேண்டும்.

சென்னையில் நவீன ரொட்டித் தொழிற்சாலை

சென்னை, டிச. 1—

"சென்னையில் அரசுத் துறை நிறுவப்படும் நவீன ரொட்டித் தொழிற்சாலை, டிசம்பர் திங்களில் வேலை துவங்கும்; நாள் ஒன்றுக்கு 400 கிராம் எடையுள்ள 22,000 ரொட்டிகள் ரிக்கப்படும்"

என்று உணவமைச்சர் கே. ஏ. மதியழகன் சட்டமன்ற மேலவையில் தெரிவித்தார்.

டில்லியில் அண்ணு

குடியரசுத் தலைவருடன் சந்திப்பு

புதுடில்லி, டிச. 1—

அறிஞர் அண்ணு அவர்கள் நேற்று விமானமூலம் புதுடில்லி வந்தடைந்தார்கள்.

விமானநிலையத்தில் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரா. செழியன், க. இராசாராம், ஜி. பி. சோமசுந்தரம், முரசொலி மாறன், திருச்சி மாவட்டச் செயலாளர் அன்பில் தர்மலிங்கம் ஆகியோரும் டெல்லிவாழ் தமிழ்ப் பெருமக்களும் திரளாக வந்திருந்து வரவேற்றனர்.

அண்ணு அவர்களுடன் பேராசிரியர் க. அன்பழகன், கி. மனேகரன், வேலூர் மா. பா. சாரதி எம்.எல்.ஏ. ஆகியோரும் வந்தனர்.

தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதி இடைத்தேர்தலுக்குப் பின், அண்ணு அவர்கள் டில்லிக்கு இப்போதுதான் முதல் தடவையாக வந்துள்ளார்கள்.

டில்லியில் உள்ள தமிழக அரசின் மாளிகையான 'தமிழக மாளிகை'யில் அண்ணு அவர்கள் தங்கியுள்ளார்கள்.

குடியரசுத் தலைவர் திரு. ஜாகிர் உசேன் அவர்களை இன்று அண்ணு அவர்கள் சந்தித்து. உலகத் தமிழ் மாநாட்டைத் துவக்கிவைக்குமாறு கேட்டுக் கொண்டார்கள்.

இன்று துவங்கியுள்ள தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் அண்ணு கலந்துகொண்டார்.

நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சி மொழித் திருத்த மசோதா குறித்து, கழக உறுப்பினர்களுடன் கலந்துரையாடினுர்கள்.

நம்நாடு

இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1998 கார்த்திகை 15 (1—12—67) வெள்ளி

சீர்திருத்தத் திருமணச் சட்டம்

சீர்திருத்தத் திருமணம்—திருந்திய திருமணம்—சுயமரியாதைத் திருமணம்—என்பன போன்ற பல்வேறு பெயர்களால், கடந்த முப்பதாண்டுகளுக்குமேலாகத் தமிழகத்தின் பல பகுதிகளிலும் நடைபெற்றுவந்துள்ளன. இத்தகைய திருமணங்களைச் செய்துகொண்டவர்கள் பெரிதும் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களே ஆவர்!

இந்து மதத்தைச் சேர்ந்தவர்களே பெரிதும் இத்திருமணங்களைச் செய்துகொண்டவர்களாக இருந்தும், இத்திருமணங்கள், இந்துச் சட்டப்படி செல்லத்தகாதவைகளாக இருந்துவருகின்றன. 'இத்தகைய திருமணங்கள், சட்டப்படி செல்லத்தக்கவை அல்ல' என்ற தீர்ப்பையும் சில வழக்குகளில் நீதிமன்றம் வழங்கியுள்ளது.

இத்தகைய திருமணங்கள், 'சட்டப்படி செல்லத்தக்கவையே' என்ற நிலை இருந்திருக்கும்பட்சத்தில், இதற்குள்ளாக வைதீகத் திருமணங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டிருக்கும். நடைபெற்றுள்ள திருமணங்கள் அனைத்தும் சீர்திருத்தத் திருமணங்களாகவே நடைபெற்றிருக்க முடியும்.

'சட்டப்படி செல்லக்கூடியதல்ல' என்ற நிலை இருக்கின்றபொழுது, சீர்திருத்தத் திருமணங்களைச் செய்துகொள்ள விருப்பமுடையவர்கள்கூட, அச்சத்துடன்தானே செய்துகொள்ளத் துணிவர்? சீர்திருத்தத் திருமணங்கள் செய்துகொள்வதை மேலும் பரவலாக்க வேண்டும் என்ற நோக்கத்தில், 'சீர்திருத்தத் திருமணங்களைச் செல்லத்தக்கவையாக ஆக்குவதற்கான தனிச் சட்டம் இயற்றப்பட வேண்டும்' என, திராவிடர் கழகமும், பின்னர் திராவிட முன்னேற்றக் கழகமும் திரும்பத் திரும்ப வற்புறுத்திவந்தன.

அவ்வாறு வற்புறுத்தப்பட்டு வந்ததற்கு இதுவரை விமோசனம் ஏற்படவே இல்லை; அவ்வற்புறுத்தலை, தமிழக ஆட்சிபீடத்தில் தொடர்ந்து இருந்துவந்த காங்கிரசுக் கட்சியினர் அலட்சியப்படுத்தியே வந்தனர்.

1952-ம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலுக்குப் பின்னர் அமைந்த சட்டமன்றத்தில், சீர்திருத்தத் திருமணங்களைச் சட்டப்படி செல்லத்தக்கவையாக்க—அதற்கான மசோதா ஒன்றை—அரங்கசாமி என்ற எதிர்க் கட்சி உறுப்பினர் கொண்டுவந்தார்; அது, சட்டமாக்கப்படாமலே தொலைக்கப்பட்டுவிட்டது.

அதற்குப் பின், 1957 தேர்தலுக்குப் பின், தி.மு.க. சார்பில் ஓர் மசோதா கொண்டுவரப்பட்டு அதுவும் தோற்கடிக்கப்பட்டுவிட்டது. அடுத்து, மூன்று ஆண்டுகளுக்கு முன்னர், இப்பொழுது சட்ட அமைச்சராக இருந்துவரும் செ. மாதவன் அவர்கள், சீர்திருத்தத் திருமணங்களைச் சட்டப்படி செல்லத்தக்கவையாக ஆக்குவதற்குத் தனி மசோதா ஒன்றைக் கொண்டுவந்தார்; அம்முயற்சியும், காங்கிரசு ஆட்சியினுல் சிதைக்கப்பட்டுவிட்டது.

சீர்திருத்தத் திருமணங்களைச் சட்டப்படி செல்லத்தக்கவையாக ஆக்கத் தனிச் சட்டம் இயற்றப்படுவதால், காங்கிரசுக் கட்சிக்கு ஏற்படக்கூடிய இழப்பு எதுவுமில்லை. 'நினைப்பில் ஏற்படக்கூடிய முற்போக்கு உணர்வையும் முனைப்பையும் பரவவிடாமல் தடுத்துவிட வேண்டும்' என்ற நச்சு நினைப்பில்தான், மேற்படி தனிச் சட்டம் இயற்றப்படுவதற்குக் காங்கிரசுக் கட்சி முட்டுக்கட்டை போட்டுவந்தது.

ஆனுல், அவர்கள் போட்ட முட்டுக்கட்டையின் விளைவாக, தேவைப்படக்கூடிய தனிச் சட்டம் நிறைவேற்றப்படவில்லையே அல்லாது, அவர்கள் நோக்கப்படி சமூகத்தில் சீர்திருத்தத் திருமணங்கள் செய்யப்படுவது தீவிரமாக வளர்ந்துவருவதைத் தடுத்து நிறுத்திவிட முடியவில்லை. இவ்வகையில், காங்கிரசுக் கட்சி முழு ஏமாற்றமே அடைந்திருக்கிறது.

இப்பொழுது, தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள முன்னேற்றக் கழகம், உடனடியாகச் சீர்திருத்தத் திருமணங்களை செல்லத்தக்கவையாக ஆக்கக்கூடிய தனிச் சட்டத்தை நிறைவேற்றி இருக்கிறது. இச்சட்டம் நிறைவேற்றப்பட்டிருப்பதன் மூலம், நமது சமூகத்தின் நீண்டகாலத் தேவையை, நமது கழக ஆட்சி நிறைவு செய்திருக்கிறது.

இத்திருமணச் சட்டத்தை நிறைவேற்றி வைத்திருப்பதன் வாயிலாக, நமது சமுதாயத்துக்கு இன்றியமையாத பணியைச் செய்து முடித்திருக்கிறது. சீர்திருத்தத்தில் நம்பிக்கையும் ஆர்வமும் கொண்டிருக்கின்ற சமுதாயச் சீர்திருத்தவாதிகள் அனைவரும் இச்சட்டத்தை மகிழ்ச்சியுடன் வரவேற்பதுடன், இச்சட்டத்தை நிறைவேற்றிவைத்த கழக ஆட்சியைப் பாராட்டவும் செய்வர்.

சீர்திருத்தத் திருமண மசோதாமீது, சட்டமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் பங்கு கொண்ட உறுப்பினர்கள் அனைவரும், மசோதாவை வரவேற்று ஆதரித்துப் பேசியுள்ளனர். இன்று எதிர்க் கட்சியாக இருந்துவரக்கூடிய காங்கிரசுக் கட்சி, ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த நேரத்தில், இதே திருமண மசோதா சட்டமாக ஆக்கப்படுவதை எதிர்த்து வந்திருந்தபோதிலும், இப்பொழுது ஆதரித்து, சட்டமாக நிறைவேற ஒத்துழைப்புத் தந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

மசோதா விவாதிக்கப்பட்டபொழுது, எதிர்க் கட்சித் தலைவர், 'திருமணச் செலவுக்கு உச்சவரம்பு கட்டும் சட்டம் இயற்றப்பட வேண்டும்' என்ற கருத்தை வெளியிட்டுள்ளார். அவர் கருத்துப்படி, திருமணச் செலவுக்கு உச்சவரம்புச் சட்டம் இயற்றப்பட்டாலும், அச்சட்டத்தை மதித்துப் பணம் படைத்தவர்கள், தங்கள் வீட்டுத் திருமணச் செலவுகளைக் குறைத்துக்கொள்வார்களா என்பது சந்தேகமே!

சட்டமன்றத் தேர்தல்களில் வேட்பாளர்களாக நிற்பவர்கள், 'இவ்வளவு தொகையைத்தான் தேர்தலுக்காகச் செலவிடவேண்டும்' எனச் சட்டமியற்றப்பட்டிருக்கிறது. இச்சட்டம், எந்த முறையில் மதிக்கப்பட்டு வருகிறது என்ற உண்மையை, நம்மைவிட நன்கு தெரிந்திருக்கக்கூடியவர் எதிர்க் கட்சித் தலைவர். உண்மை தெரிந்திருக்கின்ற இவர் போன்ற ஒருவர், 'திருமணச் செலவுக்கு உச்சவரம்பு கட்டும் சட்டம் இயற்றப்பட வேண்டும்' எனக் கருத்தறிவித்திருப்பது வியப்பளிக்கக்கூடியதாகும்.

நமது சமுதாயத்தின் நீண்டகாலத் தேவை, இந்தச் சீர்திருத்தத் திருமணச் சட்டம். இத்தகு திருமணச் சட்டம் ஒன்றை நிறைவேற்றிவைக்க ஏற்கனவே மூன்று முறை மேற்கொள்ளப்பட்ட முயற்சியை, காங்கிரசு ஆட்சி சிதைத்துவிட்டிருக்கிறது, சீர்திருத்தத் திருமணத்தில் நம்பிக்கையுடைய கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னர்தான், இச்சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதில் மறைந்துகிடக்கின்ற படிப்பினையை நாம், மனத்தில் பதியவைத்துக்கொள்ள வேண்டும்.

—கா. க.

சுரங்கப் பாதைகள் அமைப்பதில் சுணக்கம்

நான்காம் திட்டத்தின் நிலையே காரணம்

சென்னை, நவ. 29—

"திருச்சி — திருவெறும்பூர் இரயில்வே குறுக்குப் பாதையிலும், மற்றும் வெளியூர்களில் பல இடங்களிலும் சுரங்கப் பாதை அமைக்கும் திட்டங்கள் நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன; ஆனுல், நான்காம் திட்டத்தின் நிலையே இன்னதென்று தெரியாதிருப்பதால், அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட முடியாதிருந்து வருகின்றன"

என்று, பொதுப் பணி அமைச்சர் மு. கருணநிதி, சட்டமன்றத்தில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தார்.

வாழ்க்கைச் செலவு குறைகிறது

சென்னை, நவ. 30—

நவம்பர் 18-ந் தேதியுடன் முடிந்த வாரத்தில், சென்னை நகரில் தொழிலாளர் பிரிவினருக்கான வாழ்க்கைச் செலவு ஒரு புள்ளி குறைந்து 710-ல் நின்றது.

சனநாயகத்தைக் காக்க மாணவர்கள் ஆற்றவேண்டிய பணி

லயோலாக் கல்லூரியில் அண்ணு ஆய்வுரை

"பாகிஸ்தான் பர்மா, இந்தோனேசியா ஆகிய நாடுகளை எடுத்துக்கொண்டால், அந்த நாடுகளும் இந்தியாவைப் போலவே சுதந்தரம் பெற்றன; ஆனுல், பெற்ற சுதந்தரத்தால் மக்களுக்கு என்ன நன்மை கிடைத்தது? சனநாயகம் அழிந்து சர்வாதிகாரம் உருவெடுத்தது! மக்களுடைய உரிமைகள் பறிக்கப்பட்டன!

"சனநாயகத்தை ஏற்றுக்கொண்ட நாம், அந்த சனநாயகத்தை நல்ல முறையில் பாதுகாக்க, மக்களிடையே சனநாயக உணர்வைப் பரப்புவதற்குப் பாடுபட வேண்டும்; அப்படிப் பாடுபடுவதற்கு மாணவர்கள் முன்வர வேண்டும்.

"சமுதாயத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் மாணவர்கள்; எனவே அவர்கள், தங்கள் சொந்த வாழ்க்கையை முதலில் கவனித்துவிட்டு, சமுதாயத்திற்குத் தங்களால் இயன்ற அளவுக்கு உதவி செய்யவேண்டும்; அவ்வித உதவியால்தான் சனநாயகம் காப்பாற்றப்பட முடியும்.

"'எங்களால் எப்படி சனநாயகத்தைக் காப்பாற்ற இயலும்?' எனக் கேட்கலாம்; மக்களிடம் உள்ள சக்தி சாதாரணமானதல்ல; அரசை ஆக்கவும் அழிக்கவும் வல்லமைபடைத்தது அது; அந்தச் சக்தியைப் பயன்படுத்தும் விதத்தில் பயன்படுத்தினுல்தான் அரசு நிலைக்கும்!"

—லயோலா கல்லூரியில்

சிவசேனை பற்றி நீதி விசாரணை நடத்துக!

வெறும் கண்டனத்தால் பயன் விளையாது!

மக்களவையில் வெ. கிருஷ்ணமூர்த்தி வற்புறுத்தல்

புதுடில்லி, நவ. 30—

"பம்பாயில் அட்டூழியம் செய்துவருகிற சிவசேனுவின் நடவடிக்கைகளைத் தடை செய்ய வேண்டும்; அதன் நடவடிக்கை குறித்து நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்த வேண்டும்"

என்று மக்கள்சபையில், கழக உறுப்பினர் வெ. கிருஷ்ணமூர்த்தி வற்புறுத்தினுர். அவர் மேலும் கூறியதாவது:—

"மாராட்டிர மக்களின் குறைகள் நியாயமானவையாக இருக்கலாம்; நாட்டின் மற்ற எந்தப் பகுதியிலிருந்தும், மக்கள் தமிழகத்திற்கு வந்து வேலை செய்யவோ தொழில் நடத்தவோ செய்யலாம்; பிலோ மோடி அல்லது தாமனி, அங்கே வந்து குடியேறலாம்......"

ஓர் உறுப்பினர்:— "தொழிலதிபர்கள் மட்டும்தான் வரலாம் என்கிறீர்களா?"

வி. கிருஷ்ணமூர்த்தி:— "சிவசேனுவின் நடவடிக்கைகளை ஒரு முறைக்கு மேலாக உள்துறை அமைச்சர் கண்டித்திருக்கிருர். வெறும் கண்டனத்தினுல் பயன் விளையாது. அதைத் தடுக்க அமைச்சர் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிருர்?

மாராட்டிர அரசு, சிவசேனை குறித்து தக்க நடவடிக்கை எடுக்க, விசாரிக்கச் சென்றபோது, பம்பாயில் முதலமைச்சர் வி. பி. நாய்க்கையும் சந்தித்துப் பேசினேம்; என்னை அவர் ஒரு கேள்வி கேட்டார்:—"தி.மு. கழகத்தினர், திராவிட நாடு கோரியபோது, நாங்கள் இங்கிருந்து யாரையாவது விசாரிக்க அனுப்பினேமா? இப்போது நீங்கள் ஏன் இங்கு வந்து 'அரசியல் வேலை' செய்கிறீர்கள்?" என்று!

எங்களது பணிகுறித்து அவர் அறிந்துகொண்டது அவ்வளவுதான்! இவ்விதக் கருத்துக் கொண்ட வி. பி. நாய்க் அமைச்சரவை, 'நடவடிக்கை எடுக்கும்' என உள்துறை அமைச்சர் நம்புகிருரா?

'சிவ சேனுவை'த் தடை செய்யும் மசோதாவை அமைச்சர் கொண்டுவருவாரா? இல்லையென்ருல் சிவசேனுவின் நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்த ஒரு நீதிபதியை நியமிக்க வேண்டும்! நீதிபதிகளிடம் எனக்கு முழு நம்பிக்கை உண்டு. எனவே அவர்கள் எந்தப் பகுதியைச் சேர்ந்தவராக இருந்தாலும், எனக்கு ஆட்சேபனை இல்லை. உள்துறை அமைச்சரும், பம்பாயைச் சேர்ந்தவர்; குறைந்தது, 'சிவசேனை தடை செய்யப்படும்' என மிரட்டவாவது செய்கிருரா என்ருல், அதுவும் இல்லை!

'சிவசேனு, ஒரு பிற்போக்கு இயக்கம்' என்று சவாண் ஒப்புக்கொண்டிருக்கிருர்; 'பம்பாயில் அதனுல் மராட்டியரல்லாதவர்களுக்குத் தொல்லை ஏற்படுகிறது' என்பதையும் ஒப்புக்கொண்டிருக்கிருர்.

தென் இந்தியர்களுக்கு எதிரான அட்டூழியங்கள் பற்றி நீதி விசாரணை வேண்டும்."

சுயமரியாதை திருமண மசோதா

மேலவையில் நிறைவேறியது

சென்னை, நவ. 30—

சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சுயமரியாதைத் திருமண மசோதா, சட்டமன்ற மேலவையிலும் நேற்று நிறைவேற்றப்பட்டது.

எல்லா ஏழை மக்களுக்கும் இலவச வீட்டு மனை

சாதி--சமய வேறுபாடின்றி வழங்கத் தமிழக அரசு திட்டம்

சட்டமன்றத்தில் அமைச்சர் சத்தியவாணிமுத்து அறிவிப்பு

சென்னை, நவ. 29—

"வீடில்லாத எல்லாக் குடும்பங்களுக்கும் வீட்டு மனை வழங்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது"

என்று சட்டமன்றத்தில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து தெரிவித்தார்.

மேலும் துணைக் கேள்விகட்குப் பதிலளித்து அவர் கூறியதாவது:—

"தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு மனை வழங்கும் திட்டத்தை சமய வேறுபாடோ பிற வேறுபாடுகளோ கருதாது எல்லா ஏழை மக்களுக்கும்—அவர்களுடைய பொருளாதார நிலையை மட்டுமே கருத்தில் கொண்டு—நீட்டிப்பதற்கு இந்த அரசு இசைவளித்துள்ளது. இத்திட்டத்தை, தேர்ந்தெடுக்கப்பட்ட பத்து இடங்களில் முதலில் செயல்படுத்துவது என்றும் அரசு முடிவு செய்துள்ளது; இதற்கான விதிகளும், இடங்களைத் தேர்வு செய்வதும் அரசு ஆய்வில் உள்ளன.

"தாழ்த்தப்பட்டோருக்குக் கட்டிக் கொடுக்கப்படும் வீடுகளுக்கு ஆகும் செலவுத் தொகையை ரூ. 1,000-த்திலிருந்து ரூ. 3,000 ஆக உயர்த்த மத்திய அரசின் உதவியை எதிர்பார்க்கிறேம்.

"தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புப் பகுதியில், மேல்சாதிக்காரர்களுக்கென 10 சதவிகித இடம் ஒதுக்கப்பட்ட போதிலும், அவர்கள் அங்கு குடியேறத் தயங்குகின்றனர்."

கே. விநயகம்:—"தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டுமல்லால் பிற்பட்ட ஏழ்மை நிலையில் உள்ள சமூகத்தினருக்கும் வீடு கட்டிக் கொடுக்கப்படுமா?"

அண்ணு:—"மற்ற வகுப்பினர் வீடு இல்லாமல் இருந்தால் அவர்களை, 'எங்கள் வீட்டில் குடியிருங்கள்' என்று கூறப் பலர் இருக்கிருர்கள்; ஆனுல், தாழ்த்தப்பட்டவர்களைக் குடிவைத்துக் கொள்ளும் மனப்பக்குவம் நாட்டில் ஏற்படவில்லை!"

உலகத் தமிழ் மாநாட்டில் கிராமிய கலை நிகழ்ச்சிகள்

வாணவேடிக்கைகளும் இடம் பெற ஏற்பாடு

சென்னை, நவ. 30—
சென்னையில் நடக்கவிருக்கும் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டிப் பல சிறந்த கலை நிகழ்ச்சிகள் இடம் பெறவிருக்கின்றன.

மாநாட்டின் முதல் நாளாகிய சனவரி 3-ம் நாளன்று மாபெரும் ஊர்வலம் ஒன்று நடைபெறும்.

அதன்பின், கடற்கரையில் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர் உசேன் அவர்களும், முதல் அமைச்சர் அண்ணா அவர்களும், மற்றும் வெளிநாட்டுத் தமிழறிஞர்களும் கலந்துகொள்ளும் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும்; கூட்டத்தின் முடிவில் வாணவேடிக்கைகள் நடைபெறும்; அதில் தலைசிறந்த வாணவேடிக்கைக்காரர்கள் கலந்துகொள்வார்கள்; அவர்களில் மிகச் சிறந்தவரென்று நடுவர்களால் தெரிந்தெடுக்கப்படுபவருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அண்ணா அவர்கள், ரூ. 1000 பரிசு அளிப்பார்கள்.

சனவரி 4-ம் நாளிலிருந்து 10-ம் நாள் வரையில் நடைபெறவிருக்கின்ற மாநாட்டில், தமிழகத்தின் தலைசிறந்த கிராமியக் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்; கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுகின்றவர்களுக்கும் பரிசுகள் வழங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் பங்கு பெற விரும்புகிறவர்கள் 7—12—67-க்குள், கீழ்க்கண்ட முகவரிக்கு விண்ணப்பித்துத் தொடர்பு கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

முகவரி:—மு. ரா. பெருமாள் (முதலியார்), தமிழ் வளர்ச்சி இயக்குநர். இரண்டாம் உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாட்டு அமைப்புச் செயலாளர், சென்னை-9."

செங்கற்பட்டு மாவட்ட தலைமையகம் காஞ்சிக்கு மாறும்

நிர்வாக வசதியை முன்னிட்டே இந்த ஏற்பாடு

சென்னை, நவ. 29—
"செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியாளர் தலைமை அலுவலகத்தை சென்னை நந்தனத்திலிருந்து காஞ்சிபுரத்துக்கு மாற்றும் யோசனை பற்றி செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து அறிக்கை கோரப்பட்டுள்ளது; நிர்வாக வசதியை முன்னிட்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது"

என்று சட்டமன்றத்தில், கே. விநாயகத்தின் அவசரக் கேள்வி ஒன்றுக்கும் பதிலளிக்கையில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் கூறினார்கள்.

"முதலமைச்சரின் சொந்த ஊர் என்பதால் காஞ்சிக்கு மாற்றப்பட்டிருக்கிறதா?"

என்று திரு. விநாயகம் கேட்டதற்கு அண்ணா பதிலளித்ததாவது:—

"இந்த யோசனை, 1962 முதலே இருந்துவந்தது; அவசர நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டது; எனக்கு ஒன்றும் இதில் தனிப்பட்ட அக்கறை கிடையாது.

"செங்கற்பட்டு மாவட்டத் தலைமை அலுவலகத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சென்னை நகரில் வீட்டு வசதி கிடைப்பது கடினமாக உள்ளது; மேலும் வாழ்க்கைச் செலவும் இங்கே அதிகம்.

"செங்கற்பட்டு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் யோசனைக்கு மாற்றாக, செங்கற்பட்டு மாவட்டத் தலைநகரை காஞ்சிக்கு மாற்றுவதை மாவட்டக் காங்கிரசுக் கமிட்டி ஆதரித்துத் தீர்மானம் போட்டிருக்கிறது. நண்பர் விநாயகம், தம் சொந்தக் கட்சியின் தீர்மானத்தை கூடப் படிக்கவில்லை போலும்!"

கா. வேழவேந்தன்:—"கும்மிடிப்பூண்டி, பொன்னேரி வட்டாரங்களை சென்னை நகருடன் இணைக்க ஆவன செய்யப்படுமா?"

அண்ணா:— "இது ஒரு சுவையான யோசனையாகும்!"

வேலையின்மையைப் போக்கும் புதிய தொழில்கள்

மாநில அரசின் ஆதரவு கிட்டும் என அமைச்சர் உறுதி

சென்னை, நவ 28—
வேலை தேடித்தரும் நிறுவனங்களில் பதிவாகியுள்ளபடி, இவ்வாண்டு சூலை முதல் நாள் வரை 2,39,206 பேர் வேலையில்லாமல் இருந்தார்கள்; அவர்களில், எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் 65,566 பேர்; பட்டப் படிப்புக்குக் கீழ்ப் படிப்புள்ளவர்கள் 5,233 பேர்; பட்டதாரிகள் 6,500 பேர்; எஸ்.எஸ்.எல்.சி. வரை படிக்காதவர்கள், எழுத்தறிவே இல்லாதவர்கள் 10,258 பேர்; பொறியியல் பட்டதாரிகள் 672 பேர்; மருத்துவப் பட்டதாரிகள் 45 பேர்.

இத்தகவலை, தொழிலமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், சட்டமன்ற மேலவையில் தெரிவித்தார்.

தங்களுடைய தொழில் நிறுவனங்களில் இனி வேலைக்கு அமர்த்தப்படுபவர்களை வேலை தேடித்தரும் நிறுவனங்களின் மூலமாகத் தேர்ந்தெடுக்கும்படி, மாநிலத்தில் உள்ள தொழிலதிபர்களைக் கேட்டுக்கொண்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

படித்தவர்களிடையே நிலவும் வேலையின்மை நிலையைப் போக்கப் புதிய தொழில் நிலையங்களைத் துவக்குவதற்கு அரசு ஆதரவு தருகிறது என்றும் அமைச்சர் கூறினார்.

சிதம்பரம் வட்டத்தில் வெள்ளத் தடுப்பு

பரவனாற்றில் ரூ. 80,000 செலவில் அணை

சென்னை, நவ. 29—
"சிதம்பரம் வட்டம் பின்னலூர்—வடலூர் சாலையின் குறுக்கே ஓடும் பரவனாற்றில் வரும் வெள்ளத்தினால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாழாவதைத் தடுக்க ஆற்றின் தென் கரையில் சாலையிலிருந்து ஒரு மைல் தூரம் ஒரு தடுப்பு அணை பி. கொளக்குடி கிராம எல்லையில் கட்டும் திட்டம் ஆய்வில் உள்ளது; இதற்கு ரூ 80,000 செலவு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது"

என்று, பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி இன்று சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

முகவரி:

டி. கே. சீனிவாசன்,
c/o டாக்டர் சிவலிங்கம்,
12, சதாசிவ ஐயர் தெரு,
கோபாலபுரம், சென்னை–6

ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்த முதல்வர்!

"ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து இந்தியாவில் நடந்த கிளர்ச்சிக்கு 60 ஆண்டுகளுக்கு முன்பே வித்தூன்றியவர்கள், அப்பொழுது அமெரிக்காவில் குடியேறி வாழ்ந்துவந்த இந்தியர்கள் ஆவர்.

"முதன் முதலில் 'ஒத்துழையாமை இயக்க'த்திற்குக் குரல் கொடுத்த டாக்டர் ஹர்தயாள் என்பவர், 1907-ல் அமெரிக்காவிலிருந்து 'புரட்சி' என்ற ஏட்டை நடத்தி வந்தார்.

"அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, இன்னும் மற்றைய ஐரோப்பிய நாடுகளில் குடியேறியிருந்த இந்தியர்களிடையே இதற்கு நிறைய செல்வாக்கு இருந்தது"

என்று அமெரிக்காவில் பத்திரிகையாளராகப் பணியாற்றும் டாக்டர் கோவிந்த பிஹாரி லால் என்பவர் கூறியிருக்கிறார்.

—'டெக்கான் ஹெரால்டு'

அண்ணா புகழ் நானூறு

நூல் வெளியீட்டுக் குழு வேண்டுகோள்

அகநானூற்றையும், புறநானூற்றையும் கண்டவள் தமிழன்னை; அந்த வரிசையிலே மற்றுமொரு நானூறு; அதுதான், அறிஞர் அண்ணாவின் புகழைக் காருள்ளளவும், கடல் நீருள்ளளவும், இப்பாருள்ளளவும் ஒலித்துக்கொண்டே இருக்கும் 'புகழ் நானூறு.'

அண்ணாவின் புகழ் பாடும் புதிய நானூறு, பாவலர் கூட்டம் சூட்டவிருக்கும் புகழ் மாலையாக இருக்கவேண்டும்.

தமிழான்றோரே! தமிழ்ச் சான்றோரே! புலவர் பெருமக்களே! பேராசிரியர்களே! தமிழாசிரியர்களே! பூத்துவரும் இளங் கவிஞர்களே! அகவற் பாவில் முப்பது அடிகளுக்கு மேற்படாமல், திணை--துறைகளோடு தனித் தமிழ் கொஞ்ச—பாடலுக்கேற்ற தலைப்போடு அறிஞர் அண்ணாவின் புகழொலிக்கும் தங்கள் ஆக்கங்களைத் தாருங்கள்.

அறிஞர் பெருந்தகையின் மணி விழாவின்போது, அதனை அவர் தம் திருவடிகளில் படைக்க வேண்டும்.

ஆக்கங்களை, 1968-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் இறுதிக்குள் அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

அதற்குமுன் தங்களின் அன்பான ஒப்புதலை, 1967-ம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குள் அளிக்க வேண்டுகிறோம். அனுப்பவேண்டிய முகவரி:—அண்ணா புகழ் நானூறு வெளியீட்டுக் குழு, 95, நேரு வீதி, புதுவை–1"

என்று புதுவையில் அமைக்கப்பட்டுள்ள அண்ணா புகழ் நானூறு நூல் வெளியீட்டுக் குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்தக் குழு, கவிஞர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் சு. பெருமாள், புதுவை வட்டச் செயலாளர் எம். ஏ. சண்முகம் இருவரும் துணைத் தலைவர்களாகவும், செ. முத்து செயலாளராகவும் உள்ளனர்.

சென்னை 55-வது வட்ட எஸ். எஸ். ஆர். மன்றம்

சென்னை 55-வது வட்டத் துணை மன்றமான கக்கன் காலனி எஸ்.எஸ்.ஆர். மன்ற நிர்வாகிகள் தேர்தல், 18—10—67 அன்று வட்டச் செயலாளர் அன்பெழில் அவர்களை ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது; அதுபோது கீழ்க்கண்டவர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— தலைவர்: பாலசுந்தரம்; செயலாளர்: எஸ். செல்வராசு; துணைச் செயலாளர்: ஜி. கன்னியப்பன்; பொருளாளர்: கே. மோகன்; செயற்குழு உறுப்பினர்கள்: இரா. இளங்கோ, தமிழ்மாறன், இராமதாசு, ஆர். முனுசாமி, எஸ். தங்கவேல், வேதாசலம்.

பம்பாய்--ஓர்லி எம்.ஜி.ஆர். மன்றம்

பம்பாய்–கம்பாலாக்குன்று கழகத் துணை மன்றமாக எம். ஜி. ஆர். மன்றம், ஓர்லி பகுதியில் துவக்கப்பட்டிருக்கிறது. புதிதாகப் பெரியதோர் பணிமனையும் கட்டப்பட்டுள்ளது; இதன் திறப்புவிழாவும் பொதுக்கூட்டமும் அக். 10-ல் நடைபெற்றது.

மன்றப் பணிமனையை கே. சஞ்சீவன் தலைமையில் அ. முத்தையா திறந்துவைத்தார்; நெல்லை செழியன் கொடியேற்றினார்; அறிஞர் அண்ணா படத்தை பி. எஸ். கலைச்செல்வனும், கருணாநிதி படத்தை த. மு. பொற்கோவும், எம்.ஜி.ஆர். படத்தை எஸ். தியாகராசனும் திறந்துவைத்தனர்.

கம்பாலாக்குன்று தி.மு.க. செயலாளர் எஸ். சங்கர், மன்றச் செயலாளர் எஸ். வரதராசன், கே. ந. கருணாநிதி, எம். பெரியசாமி நெல்லை பாண்டியன் ஆகியோர் தமிழகத்தில் நடைபெறுகின்ற கழக ஆட்சியின் சிறப்புக்களை விளக்கிப் பேசினர்.

கூட்டத்திற்கு வருகைதந்த அனைவருக்கும் மன்றச் சார்பில் இனிப்பு வழங்கப்பட்டது. கே. பி. இராமசாமி நன்றி நவின்றார்.

மன்ற நிர்வாகிகள் விவரம்:— தலைவர்: கே. சஞ்சீவன்; செயலாளர்: எஸ். வரதராசன்; துணைச் செயலாளர்: கே. பி. இராமசாமி; பொருளாளர்: செங்கோடன்.

கூத்தாநல்லூர் எம். ஜி. ஆர். மன்றத் துவக்க விழா

கூத்தாநல்லூர் பெரிய கடை வீதியில், தி. மு. க. கிளையின் சார்பு மன்றமாக எம். ஜி. ஆர். மன்றம் முன்னாள் காவல்துறை ஊழியர் வெ. கண்ணன் அவர்களால் 17—11—67 அன்று துவக்கி வைக்கப்பட்டது; விழாவிற்கு என். எம். ஏ. குத்தூசு தலைமை தாங்கினார்.

அறிஞர் அண்ணா உருவப் படத்தை தி. மு. க. துணைச்செயலாளர் ஒ. எம். ஏ. சபீரும், பொதுப் பணி அமைச்சர் மு. கருணாநிதி உருவப் படத்தை தி. மு. க. பொருளாளர் எஸ். ஈ. எச். மைதீனும், கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் உருவப் படத்தை என். எம். ஏ. குத்தூசும், எம். ஜி. இராமச்சந்திரன் படத்தை வெ. கண்ணனும் திறந்துவைத்தபின், அனைவரும் ஊர்வலமாக வானொலி பூங்காவுக்குச் சென்றனர்.

தோழர் என். எம். ஏ. குத்தூசு தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில், வட்டச் செயலாளர் கு. பாலகிருட்டினன், நாகரெத்தினம், ஏ. எம். ஏ. ரகீம், எஸ். எம். அமானுல்லா ஆகியோர் உரையாற்றியபின், தோழர் வெ. கண்ணன் தி. மு. கழகக் கொள்கைகளையும், கழக அமைச்சரவையின் சாதனையையும் விரிவாக எடுத்துரைத்தார்.

செயலாளர் அ. ஜெய்னுலாபிதீன் நன்றி கூறினார்.

சின்ன தாராபுரம் தி. மு. க. பணிமனை அடிக்கல் நாட்டுவிழா

சின்னதாராபுரம், நவ. 23—
இன்று காலை 10-மணியளவில் கரூர் வட்டம் சின்னதாராபுரத்தில் கிளைக் கழகத்திற்கான பணிமனைக்குத் திரு. குப்பண்ண வாத்தியார் தலைமையில் தோழர் பரமத்தி சண்முகம் அடிக்கல் நாட்டினார். விழாவில் செயலாளர் டி. கே. பெரியசாமி, சாமிநாதன், இராமசாமி (தொக்குப்பட்டி ஊராட்சித் தலைவர்) ஆகியோர் கலந்துகொண்டனர்.

மறைவு

மதுரை 4-வது வட்டாரம் முகைதீன் பிச்சை நினைவு மன்ற உறுப்பினரும் கழகத் தோழருமான இரா. வரதராசன் (வயது 27) 17—11—67-ல், நெல்லை மாவட்டம் சாத்தான்குளம் வட்டாரம் அழகப்பபுரம் கிராமத்தில் உள்ள தனது இல்லத்தில் இயற்கையெய்திய செய்தி வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

பாந்திரா தி.மு.க.

19—11—67 மாலை 6-மணிக்கு பம்பாய்–பாந்திரா தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம், தோழர் எம். ஏ. நண்பன் தலைமையில் நடைபெற்றது.

கிளையின் நடவடிக்கைகளில் தளர்ச்சி காணப்படுவதால் உறுப்பினர்கள் இனி தெம்போடு பாடுபட்டுக் கிளையை வளரச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

கடந்த கூட்ட நிகழ்ச்சியை துணைச் செயலாளர் முருகேசனும், வரவு-செலவுகளை மின்னலும் படித்துக்காட்ட ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கூட்டத்தில் தென் சென்னை வாக்காளர்களைப் பாராட்டியும், லோகியா மறைவுக்கு வருந்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சென்னை 92-வது வட்ட கருணாநிதி முத்தமிழ் மன்றம்

சென்னை 92-வது வட்ட கருணாநிதி முத்தமிழ் கலை மன்ற நிர்வாகிகள் தேர்தல், 18—11—67-ல் எம். எஸ். இராமச்சந்திரன் இல்லத்தில்—கிளைக் கழகச் செயலாளர் செ. கண்ணப்பன் தலைமையில் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர்:—

தலைவர்: ஏ. நாகரத்தினம்; செயலாளர்: எம். எஸ். இராமச்சந்திரன்; பொருளாளர்: அப்துல் ரசாக்; துணைச்செயலாளர்: தி. நவநீதம்; செயற்குழு உறுப்பினர்கள்: நா. சிவலிங்கம், க. சின்னத்தம்பி, என். இராதாகிருஷ்ணன், சி. துரை, கருணாநிதி, நரசிம்மன், கே. சாமிநாதன், கோ. சு. மணி, செயராமன், பி. சிவலிங்கம், ரா. சுப்பிரமணியம்.

திருவான்மியூர் குப்பம் எம் ஜி. ஆர். மன்றம்

12—11—67 அன்று திருவான்மியூர்குப்பம் எம்.ஜி.ஆர். மன்ற புதிய நிர்வாகிகள் தேர்தல் சைதை வட்டத் தி. மு. க. செயலாளர் சி. இராமலிங்கம் தலைமையிலும்—திருவான்மியூர் தி. மு. க. செயலாளர் ப. நடராசன் முன்னிலையிலும் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் விவரம்:—

தலைவர்: பா. மணிவண்ணன்; செயலாளர்: செல்வபாளையம்; துணைச் செயலாளர்: த. கோவிந்தராசு; பொருளாளர்: ந. மாயகிருட்டினன்; வட்டப் பிரதிநிதி: டி. தனபால்; செயற்குழு உறுப்பினர்கள்: எம். இராசு, மு. ஆறுமுகம், அ. கோதண்டம், அ. முத்து, எம். செயராமன, சி. துளசி, மு. இராமு, சி. கணேசன், ஆ. மனோகரன்.

சென்னை--புது வண்ணை தமிழ் நெறிக் கலை--இலக்கிய மன்றம்

சென்னை--புது வண்ணை தமிழ் நெறிக் கலை—இலக்கிய மன்றத்தின் நிர்வாகிகள் தேர்வு, கங்காதரன் தலைமையில் நடந்தது; மா. ஆத்மநாதன் பி.ஏ. (ஆனர்சு) பி.டி. தலைவராகவும், இரா. மாணிக்கவாசகம் துணைத் தலைவராகவும், ந. இளமாறன் செயலாளராகவும், இரா. இராதாகிருஷ்ணன் துணைச் செயலாளராகவும், கா. சே. சானகிராமன் பொருளாளராகவும் மற்றும் எழுவர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

யாருடைய பொருள்கள்?

சென்னை போலீசுக் கமிஷனர் அலுவலகத்தில், நவம்பர் 30-ந் தேதி வரை பொதுமக்களால் உரிமை கோரப்படாமல் இருக்கும் சைக்கிள், துணி போன்ற பொருட்கள், டிசம்பர் 26-ந் தேதிக்குப் பிறகு விற்பனை செய்யப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்தப் பொருள்களை உரிமை கொண்டாடக்கூடிய யாரும், இந்தத் தேதிக்கு முன்னதாகப் போலீசுக் கமிஷனரிடம் சென்று தங்களது உரிமையை நிலைநாட்டிக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சட்டமன்றத்தில்...!

[போகாத நிருபர்]

சட்ட அமைச்சர் செ. மாதவன் 'கேரோ' பற்றிய தெளிவான விளக்கம், நேற்றுடன் முடிந்த சட்ட மன்ற மேலவையின் மூலம் தமிழகத்துக்குக் கிடைத்துள்ளது!

'கேரோ' என்ற சொல்லுக்கான ஆங்கில மொழி பெயர்ப்பே இன்னும் சரியாக அமையவில்லை என்ற குழப்பத்தை, சட்ட அமைச்சர்கள் மாநாட்டிலும் சுட்டிக்காட்டி இருப்பதாகக் கூறிய மாதவன் அவர்கள், 'கேரோ' பற்றிய விளக்கம் எதுவாக இருப்பினும், ஊழியர்கள், 'நிர்வாகத்தினரைச் சூழ்ந்துகொண்டு போராட்டமிடும் முறையைத் தமிழக அரசு எந்த வகையிலும் ஆதரிக்கவில்லை' என்பதனை ஐயத்துக்கிடமின்றி விளக்கியிருக்கிறார்.

வெளியே—பொதுமேடைகளில், 'கழக அரசுதான் தொழிலாளர்களை இதுபோலத் 'தூண்டி'விட்டு ஆதரவு தந்து பக்கபலமாக இருக்கிறது' எனத் தவறான பிரச்சாரம் செய்யும் காங்கிரசுக் கட்சியின் பிரதிநிதித்துவம்பெற்ற மேலவை உறுப்பினர்கள் சிலர், மன்றத்திலும் இதே போக்கினைக் காட்டியிருப்பதனை அடுத்தே அமைச்சர் மாதவன் அவர்கள், மேற்கண்ட விளக்கத்தினைத் தந்திருக்கிறார்கள்.

'கேரோ' தொழிற்சங்க உரிமைகளுக்கு உட்பட்டது மட்டுமல்ல—சட்ட அமைதிப் பிரச்சினைகளுக்கும் புறம்பானது' என்று அமைச்சர் மாதவன் அவர்கள், கழக அரசின் கருத்தினை வெளிப்படுத்தியிருப்பது, இனி இதுபற்றிய சச்சரவுகளுக்கு இடம் அளிக்காது என்று நம்புவோமாக!

★

சர்க்கரைபற்றிய இனிப்பான செய்தியுடன் நேற்றைக்கு முந்தின நாள் முடிந்தது சட்டமன்றம்; பங்கீட்டுக் கடையில் சர்க்கரையை, கிலோ இரண்டு ரூபாய் விலைக்குப் பெறுபவர்களுக்கு இனி ரூ. 1.75-க்குக் கிடைக்கு என்று உணவு அமைச்சர் மதியழகனின் அறிவிப்புக் கொடுத்த இனிப்பான உணர்வை, 'அரசியல் கசப்பு'டையதாக்கியிருக்கிறது — நேற்று மேலவையில் கொடுக்கப்பட்ட ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம்!

ஆனால் அதிலும் ஒரு அரசியல் இலாபத்தினைச் சம்பாதிக்கிறார் அமைச்சர் மதியழகன்!

சர்க்கரை ஆலைச் சொந்தக்காரர்களுக்கு 40 சத விகித உற்பத்தியினை, விருப்பம்போல் விற்பனை செய்ய அனுமதித்தது மத்திய அரசு!

கட்டுப்பாட்டு விற்பனைக்காக ஒதுக்கியுள்ள எஞ்சிய அளவில்—மாநிலத்துக்கென ஒதுக்கிய 'கோட்டா'வில், கழக அரசு 25 காசு அளவில் விலையைக் குறைத்திருக்கிறது!

திறந்த மார்க்கெட்டில் ஆலைச் சொந்தக்காரர்களால் விற்பனை செய்யப்படும் சர்க்கரையின் விலை அதிகம் என்றால், அதற்கும் பொறுப்பு மத்திய அரசு!

நவம்பர் 23-ந் தேதி வரை குவிண்டால் ரூ. 135 ஆக இருந்த சர்க்கரையை, இப்போது ஆலைச் சொந்தக்காரர்கள் ரூ. 350-க்கு விற்கிறார்கள்!

"ஓட்டல்களில் காப்பி விற்பனை விலை உயர்வு இதனால்தான்" என்று உணவு அமைச்சர் விளக்கிக் காட்டியிருப்பது, 'கழக ஆட்சியில் காப்பி விலை உயர்வு' என்று எழுத—பேச காங்கிரசுக்காரர்களுக்கு இருந்த சந்தர்ப்பத்தைப் 'பறி'த்துக் கொண்டது! ஏனெனில், அவர்கள் அப்படி எழுதினால்—பேசினால், புதுடில்லியைத்தான் பாதிக்கும்!

★

நான்கு மசோதாக்களை நிறைவேற்றியும், இரண்டு நிதி மசோதாக்களை திருத்தம் ஏதுமில்லாமலும் சட்டமன்றத்திற்குத்திருப்பியிருக்கும்மேலவையில் பொதுப்பணி அமைச்சர் கருணாநிதி தந்திருக்கும் மற்றொரு 'நிலை விளக்கம்', பொன்னுசாமி வில்வராயர் தந்த தீர்மானத்தைத் திரும்பப்பெற வைத்திருக்கிறது!

இருபதாண்டுகளாக இரண்டு இடங்களிலும் 'அவர்'களே இருந்ததால், 'தந்தையைப் பார்த்தால் மகனைப் பார்; மகனைக் கேட்டால் அப்பாவைக் கேள்' என்ற தட்டிக்கழிக்கும் போக்கு காணப்பட்டது!

"தமிழகத்தின் திறமைக்கு—உரிமைக்கு அப்பாற்பட்டது எது? மத்திய அரசின் அதிகாரத்துக்கு—வசதிக்குப்பட்டது எது?" என்ற விளக்கம், இப்போது கழக நிர்வாகத்தில் அப்போதைக்கு அப்போது தரப்படுவது, மக்கள் அரசியல் விழிப்புணர்வைப் பெறுவதில் ஒரு நீண்டகால பயனைத் தருவதாக இருக்கிறது!

சிறு துறைமுக வளர்ச்சிக்காக ரூ. 6 கோடி கேட்ட தமிழகத்துக்கு, மத்திய அரசு ரூ. 3.40 கோடி தர ஒப்புக்கொண்டு இப்போது ரூ. 1 கோடி மட்டுமே தந்திருக்கிறது; பணம் கிடைக்காததுதான் தாமதத்துக்குக் காரணம்; எனவேதான், புன்னைக்கயல்—வேப்பலோடை—மூக்கையூர் ஆகிய சிறு துறைமுகத் திட்டங்கள் மேற்கொள்ளப்படாத நிலை இருக்கிறதே தவிர வேறு ஒன்றுமில்லை" என்ற பொதுப்பணி அமைச்சர் மு. கருணாநிதி அவர்களின் கருத்துக்குப் பின்னர், உறுப்பினர் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றிருப்பது, சட்டமன்றத்திக்கு வெளியே இருப்பவர்களுக்கும் 'உண்மை நிலை விளக்கமாக' இருக்கிறது!

★

வருமான வரம்பினையும் உயர்த்தி, பி.யு.சி. இலவசக் கல்வி வசதியை, 'எல்லா சாதியினருக்கும்' என்று கழக அரசு ஆக்கியிருப்பதில் உள்ள 'சமுதாய நியதி'யினை, இன்னும் காங்கிரசுக்காரர்கள் உணர்ந்துகொள்ளாமல் அரசியல் மாச்சரிய உணர்வில்தான் இருக்கிறார்கள் என்பதற்கு, நேற்று மேலவையில், காங்கிரசு உறுப்பினர் இராசாராம் கொடுத்துள்ள தீர்மானம் சான்றாகிறது.

பதிவுபெறாத அரசு ஊழியர்கள், மற்றும் குறிப்பிட்ட வருவாய்க்குக்கீழ் உள்ளவர்கள் ஆகிய எல்லா வகுப்பினரது பிள்ளைகளும் பி.யு.சி. வரை இலவசக் கல்விபெறலாம்; ஏனையோர், கட்டணம் கொடுத்து படிக்கும் வசதிபெற்றவர்கள்; அவர்கள் கொடுக்கும் கட்டணம் நேர்மையானது—கல்விக்கூடங்களுக்குப் பயன்படக்கூடியது; **'முடிந்தவர்களுக்கும் விதி விலக்கு இருக்கவேண்டும்' என்று எந்த ஒரு தீவிர சோஷலிசத் தத்துவமும் எடுத்துச் சொல்லவில்லை; வசதியற்ற எல்லாச் சாதியினருக்கும் இந்தக் கல்வி வசதி அளிக்கப்பட்டிருப்பது, சமுதாயம் முழுமைக்கும் திருப்தியளித்துள்ளது!**

இந்த அடிப்படை புரியாமல், பி.யு.சி. இலவசக் கல்விப் பிரச்சினையை மேடைக்கு மேடை பேசுவதுபோலவே சட்டமன்ற மேலவைவரையிலும் உறுப்பினர் எடுத்துவந்திருப்பது வருந்தத்தக்கதாகும்.

அடுத்த கூட்டத் தொடருக்கு வருவதற்குமுன்னராவது அவர், சென்ற சட்டமன்ற கூட்டத் தொடரில் நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதத்துக்குப் பதிலளிக்கும்போது அண்ணா அவர்கள் அது பற்றித் தந்துள்ள விளக்கத்தை, மதிப்பிற்குரிய உறுப்பினர் படித்துப் பார்க்கட்டும்!

சங்கரி இடைத் தேர்தல்

சங்கரியில் நடைபெறும் இடைத் தேர்தல் பணிக்காகத் தலைமைக் கழகத்தின் சார்பில் மூவர் கொண்ட இடைத் தேர்தல் தலைமைப் பணிக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

குழுவில் அமைப்புச் செயலாளர் என்.வி. நடராசன் எம்.எல்.சி., மதுரை மாவட்ட தி. மு. க. செயலாளர் எஸ். முத்து எம்.எல்.சி., தஞ்சை மாவட்ட தி. மு. க. செயலாளர் மன்னை ப. நாராயணசாமி ஆகிய மூவரும் இடம் பெறுகிறார்கள்.

குழுவினர், டிசம்பர் 2-ம் நாளன்று சங்கரியில் நடைபெறும் சேலம் மாவட்ட தி. மு. க. கூட்டத்தில் கலந்துகொள்வர்.

அதனைத் தொடர்ந்து சேலம் மாவட்ட தி. மு. க. செயலாளர், ஏனைய நிர்வாகிகள், நாடாளுமன்ற—சட்டமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழக—கிளைக் கழக நிர்வாகிகள் ஆகியவர்களோடு தொடர்பு கொண்டு தேர்தல் பணியாற்றுவார்கள்.

— **தலைமைக் கழகம், தி. மு. க.**

கவர்னருக்கு....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"சட்டமன்ற உறுப்பினராகாமலே கிட்டதட்ட ஆறு மாதம் அமைச்சராக இருந்த ஒருவரின் செயலாகும் இது; அரசுத் தலைமை வழக்கறிஞரின் ஆய்வுரைக்கேற்ப மண்டலின் கோரிக்கையை நான் ஏற்க மறுத்தேன்; அதன்பின், எனக்கு எதிரான இயக்கமே தொடர்ந்து நடைபெற ஆரம்பித்துவிட்டது" என்றார் திரு. அனந்தசயனம்.

"சனநாயகம் அமைதியாக இயங்கவே நான் விரும்புகிறேன். நான்கு மாதமே ஆன ஓர் அமைச்சரவையை ஒழித்துக்கட்டவும், அதற்கு எதிராக தூற்றல்களைப் பொழியவும் எதிர்க் கட்சியால் எப்படி முடிகிறது என்பதைக் காண நான் தவறிவிட்டேன்" என்றார் அவர்.

வண்ணையில்

அண்ணா

கே. ஏ. மதியழகன்
முரசொலி மாறன்

ஆகியோருக்கு

மாபெரும் வரவேற்பு பொதுக்கூட்டம்

★

3-12 67 இரவு 8-மணிக்கு

சென்னை 5-வது வட்டம்
சோலையப்பன் தெருவில்

தலைவர் :
கே. எம். கண்ணபிரான்

வரவேற்றுப் பேசுவோர் :
கி. மனோகரன் எம்.பி.
மு. வேதாசலம் எம்.எல்.ஏ.
கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ.
ஆலடி அருணா எம்.எல்.ஏ.
என். ஆர். வீரசின்னு
டி. வெங்கடேசன் எம்.சி
கே. இராமலிங்கம் எம்.சி.

—வண்ணைப் பகுதி தி.மு.க.

இது – மாதர்களுக்கு மட்டும் :

மகப் பேறு விடுமுறை எத்தனை தடவைகள்?

பல்கலைக் கழகத்தில் சுவையான விவாதம்!

"பெண் அலுவலர்கள் எத்தனை முறை ஊதிய வசதிகளுடன் மகப் பேறு விடுமுறை அளிக்கப்படுகிறார்கள் ?"

என்ற கேள்வியை, நேற்று நடைபெற்ற சென்னைப் பல்கலைக் கழக செனட் கூட்டத்தில், டாக்டர் சந்திரன் தேவநேசன் என்னும் உறுப்பினர் எழுப்பியுள்ளார்.

"இந்தப் பிரச்சினை, நாட்டின் 'மேலிடங்கள்' பலவற்றில் பேசப்பட்டு வருகிறது. 'மூன்று முறைதான் மகப் பேறு விடுமுறை அளிக்கலாம்' என ஒரு யோசனை இருப்பதாகத் தெரிகிறது"

என, துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்கள் கூறியிருக்கிறார்.

பல்கலைக் கழகம் இப்போது தயாரித்துவரும் புதிய சட்ட விதிமுறைகளில், 'தனது பெண் ஊழியர்கள் மகப் பேறு விடுமுறையை 2-மாதங்கள் அனுமதிக்கப்படுவார்கள்' என்றுதான் இருக்கிறதே தவிர, 'எத்தனை முறை' என்று குறிப்பிடவில்லை என்பதனையொட்டியே செனட் உறுப்பினர், இந்த விவாதத்தைத் தோற்றுவித்திருக்கிறார்!

ரோஜா பாக்கு & புகையிலை

N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

நடக்க இருப்பவை

3--12--67

பழனி

அண்ணா மறுமலர்ச்சி மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு நேரு திடலில்; தலைவர் : சேவற்கொடியோன்; பேசுவோர் : கே.கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ., மு. சிவானந்தம், எல். பழனிச்சாமி, ஓ. முத்துசாமி, டி.கே.எம். யூசுப்.

கரூர்

25, 26.வது வட்ட தி மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு பசுபதி பாளையம் வடக்குத் தெரு எம். ஜி. ஆர். திடலில்; தலைவர் : மு. கணேசன்; பேசுவோர் : சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., ஆர். என். இராமசாமி, என். ஆர். இராமசாமி, கே கனகராஜ் பி.ஏ.பி.எல்., பரமத்தி சண்முகம், இரா.வைரப் பெருமாள் எம்.சி., கந்தசாமி, வேம்பரசு, மற்றும் பலர்.

சென்னை 92-வது வட்டம்

நாவலர் மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு வட பழனி சிங்கார வேலர் திடலில்; தலைவர் : மு, தங்கையன்; பேசுவோர் : அமைச்சர் செ. மாதவன், காஞ்சி மணிமொழியார், துரை முருகன் பி.ஏ., பி.ஏ. கணபதி, இரா, சங்கரலிங்கம், தோடி கண்ணன், எஸ். ஆண்டியப்பன், செகதீசன், தனபால், நாதன், தயாளன்.

மதுரை

முதல் வட்டம் எம். ஜி. ஆர். ஞாயிறு படிப்பகச் சார்பில் மாலை 6-30 மணிக்கு செல்லூர் முத்துராமலிங்க நகரில்; தலைவர் : எஸ். அழகர்சாமி; பேசுவோர் : சி. தமிழரசி பி.ஏ., கு. திருப்பதி பி.ஏ,பி.எல்., ஏ. வி. இராசு. என். பி. கிருட்டினன், மற்றும் பலர்.

ஆலந்தூர் நகரக் கழகத் தோழர்கட்கு :

2—12—67 காலை 9-மணிக்கு பழவந்தாங்கல் கழகப் பணிமனையில் ஆலந்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதி தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; அவ்வமயம் ஆலந்தூர் நகராட்சித் தேர்தல் பற்றியும், கழக வளர்ச்சி பற்றியும் ஆராயப்படும்; தோழர்கள் இதனையே அழைப்பாகக் கருதித் தங்கள் உறுப்பினர் உரிமைச் சீட்டுடன் வருகைதருமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்று சைதை வட்ட தி.மு.க.செயலாளர் சி. இராமலிங்கம் அறிவிக்கிறார்.

அறந்தாங்கி

ஆ. துரையரசன் அன்னையார் மறைவு

அறந்தாங்கித் தொகுதி கழகச் சட்டமன்ற உறுப்பினர் ஆ. துரையரசன் அவர்களது அன்னையார் நவ. 26-ம் நாள் பாலையவனத்தில் இயற்கையெய்தினார்.

சட்டமன்றக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்னைக்குச் சென்றிருந்த துரையரசன் எம்.எல்.ஏ. அவர்களுக்குத் தொலைபேசி மூலம் தகவல் கொடுக்கப்பட்டது. அவர் சென்னையிலிருந்து பாலையவனம் வந்ததற்குப் பிறகு சவ அடக்கம் நடைபெற்றது.

ஊராட்சித் தலைவர்கள், அதிகாரிகள், கிராம மக்கள், பிரமுகர்கள் மற்றும் பலர் திரளாக வந்திருந்து இறுதி மரியாதை செலுத்தினர்கள்.

அன்னையரைப் பிரிந்து துயருறும் தோழர் துரையரசன் அவர்களுக்குப் அவர் குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபமும் ஆறுதலும் உரித்தாகுக.

—ஆசிரியர்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24- சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13 [illegible] வெளியிடப்படுகிறது.)